மறுநிதி உதவிக் கழகமும் , உலக வங்கியும் அளித்துவரும் நிதி உதவியைக் கொண்டு கடன் வழங்கும் திட்டத்தை மத்திய நிலவள வங்கி பெருமளவில் முனைப்பாகச் செயல்படுத்தி வரும் இச் சமயத்தில், இப்போது செய்துள்ள முதலீடானது, வங்கி இன்னும் செவ்விய முறையில் செயல்படுவதற்குப் பேருதவியாக இருக்கும்.

வரவு-செலவுத் திட்டத்தை இம்மன்றத்தின் முன் வைத்து உரையாற்றுங்கால் நான் அறிவித்தபடி, தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் பங்கு மூலதனத்திற்கென தொடக்கத்தில் 25 இலட்சம் ரூபாய் அளிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. தமிழ் நாடு திரைப்பட அரங்குக் கழகத்திற்குப் பங்கு மூலதனமாக 10 இலட்சம் ரூபாயையும் அரசு வழங்கியுள்ளது. இத்துணை மதிப்பீட்டில் இவற்றிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

துணை மதிப்பீட்டில் சேர்த்துள்ள செலவினங்களின் முக்கியக் கூறுகள் பற்றி நான் கூறியுள்ளேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் இந்த இனங்களைப் பற்றிய விரிவான விவரங்களைக் காணலாம். துணை மதிப்பீடுகளில் சேர்ந்துள்ள ஏனைய திட்டங்கள் குறித்துச் சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதொன்றுமில்லை எனக் கூறி, 1972-73 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

### (2) அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

### (ஆ) சம்பள முரண்பாடுகளை ஆராய்ந்த தனி நபர் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த முடிவுகள் பற்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளையொட்டி அரசு எடுத்த முடிவுகளில் தென்பட்ட முரண்பாடுகளைப் பற்றி ஆராயத் தனி நபர் குழு ஒன்றை அரசு நியமித்ததை உறுப்பினர்கள் அறிவர். அண்மையில் அக்குழு சமர்ப்பித்த அறிக்கையினையும், பல்வேறு அலுவலர் சங்கங்கள் கொடுத்த விண்ணப்பங்களையும் அரசு ஒருசேர ஆய்வு செய்தது. அதை யொட்டி அரசு எடுத்த முடிவுகளை அறிவிக்க விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 18]

பட்டதாரி ஆசிரியர்களது சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 275-10-375-15-450 என்பதிலிருந்து ரூ. 300-10-350-15-500 ஆக மாற்றி உயர்த்தப்படும். இதனையொட்டி, நேர்முகத் தேர்வுக்கு பட்டப்படிப்புத் தகுதியாக அமைந்துள்ளன, முதுநிலை கூட்டுறவு ஆய்வாளர், காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள், தலைமைச் செயலக உதவியாளர்கள், மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் ஆகியோர் சம்பள விகிதங்களும் தற்போதுள்ள ரூ. 275-10-375-15-450 என்பதிலிருந்து ரூ. 300-10-350-15-500 என மாற்றி உயர்த்தப்படும். இந்த உயர்வினால், பட்டதாரி ஆசிரியர் 25,000 உட்பட 31,000 பேர் பயன் பெறுவர்.

கால்நடை உதவி மருத்துவர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 400-15-475-20-575-25-650 என்பதிலிருந்து ரூ 425-20-525-25-700 என மாற்றி உயர்த்தப்படும். இதன் பயனை ஏறத்தாழ 900 பேர் பயனடைவர்.

இளம் பொறியாளர்கள் சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 400-15-475-20-575-25-650 என்பதிலிருந்து ரூ. 425-20-525-25-700 என மாற்றி உயர்த்தப்படும். இதன் விளைவாக ஏறத்தாழ 1,900 பேர் பயனடைவர்.

இளநிலை உதவியாளர்கள் சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 200-5-250-10-300 என்பதிலிருந்து ரூ. 210-5-245-10-325 என மாற்றி உயர்த்தப்படும். இதன் பயனை ஏறத்தாழ 30,000 பேர் அடைவர்.

தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் உதவியாளர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 250-10-400 என்பதிலிருந்து ரூ. 250-10-300-15-450 என மாற்றி உயர்த்தப்படும். இதனால் ஏறத்தாழ 13,000 பேர் பயன் பெறுவர்.

தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் கண்காணிப்பாளர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 350-15-500-20-600 என்பதிலிருந்து ரூ. 350-15-425-25-600 என மாற்றியமைக்கப்படும். இதன் பயனை ஏறத்தாழ 1,100 பேர் பயன் அடைவர்.

வருவாய்த் துறையின் கீழ் வரும் கிராம அதிகாரிகள் ஊழியர்கள் மதிப்பூதியம் (Honororium) மாதமொன்றுக்கு ரூ. 7 வீதம் உயர்த்தப்படும். மொத்தம் 54,000 பேர் இதன் பயனை எய்துவர்.

இடைநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 225-5-250-10-350 என்பதிலிருந்து ரூ. 250-10-400 என மாற்றி உயர்த்தப்படும். இத்துடன் தேர்வுநிலை ஆசிரியர்களிட மிருந்து தலைமையாசிரியர்களை வேறுபடுத்திக் காட்ட சிறப்பூதிய மாக மாதம் ரூ. 15 அளிக்கப்படும். இதனால் 4,900 தலைமை ஆசிரிய கள் பலனடைவர்.

சம்பள விகிதங்கள் தற்போது மாற்றியமைக்கப்படும் பதவிகள் தவிர்த்த, மற்ற பதவிகளில், புதிய விகிதங்களில் சம்பளத்தை நிர்ணயிக்கும் முறை மாற்றியமைக்கப்படும். இதன்படி, பழைய பணிக்காலத்திற்கு இரண்டு இரண்டு, மூன்று, மூன்று ஆண்டுகள் பணிக்கு ஒரு உயர்வு வீதம் என நான்கு உயர்வுகளுக்கு மேற் படாது சம்பளம் நிர்ணயிக்கப்படும். கடைநிலை ஊழியர்களைப் பொறுத்தவரை, ஒவ்வொரு இரண்டாண்டுக்கும் ஒரு உயர்வு எனக் கொண்டு ஐந்து உயர்வுகளுக்கு மேற்படாது சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

இவை தவிர, தனி நபர் குழு சொல்லியுள்ள பல்வேறு பரிந் துரைகள் மீது அரசு விரைவில் ஆய்வு செய்து ஆணைகள் பிறப் பிக்கும்.

இச் சலுகைகள் வரும் செப்டம்பர்த் திங்கள் முதல் தேதி யிலிருந்து செயல்படுத்தப்படும். எனினும் சம்பள விகிதங்களைக் கணக்கிடுவதற்கு 2—10—1970 அடிப்படைத் தேதியாகக் கொள்ளப்படும்.

தனிநபர்குழு பரிந்துரைகள் உள்ளிட்ட இச் சலுகைகளின் விளை வாக தற்போது ஆண்டொன்றுக்கு நான்கு கோடி ரூபாய் கூடுதல் செலவும், இறுதியில் ஆண்டொன்றுக்கு ஐந்தரைக் கோடி ரூபாய் கூடுதல் செலவும் ஆகும். தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியில் அரசு மனமுவந்து அளித்துள்ள இச் சலுகைகளை அனைவரும் வர வேற்றிடுவீர் என்றும் இந்த அவை தனது ஆதரவை நல்கும் என்றும் நம்புகின்றேன்.